2017 மார்ச் 24] [திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்]

கோடி ரூபாய் அளவிற்கு ஓய்வூதியம் வழங்குவதிலே பற்றாக்குறை ஏற்படுவதால், ஓய்வூதியம் வழங்கப்படாமல் நிலுவையிலே இருந்தது. அதை மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே எடுத்துக்கூறியவுடன், வருகின்ற 28 ஆம் தேதி நிலுவையிலே இருக்கக்கூடிய 65,000 ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படும் என்று உறுதியளித்திருக்கிறார்கள். வருகின்ற 28 ஆம் தேதி அவர்களுக்குரிய ஓய்வூதியம் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் முனைவர் க. பொன்முடி, திரு. உ. மதிவாணன், திரு. கே.எஸ். மஸ்தான், திரு. த. மனோ தங்கராஜ், டாக்டர் இரா. மாசிலாமணி, திரு. பி. முருகன், திரு. கே.எஸ். மூர்த்தி ஆகியோர் எழுந்து பேசுவதற்கு வாய்ப்புக் கேட்டனர்.)

(இ) ஆலங்குளம் தொகுதி, பொத்தான்பிள்ளை குடியிருப்புப் பகுதியில் சிறுத்தைகள் நடமாட்டம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் அவரவர்களுடைய பிரச்சினைகளை இன்றைக்கு எழுப்ப வேண்டும் என்று சொல்கிறீர்கள். முடிந்தவரை வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) நீங்கள் சுருக்கமாக ஒரு நிமிடத்தில் சொன்னீர்களென்றால், அனைவருக்கும் வாய்ப்புக் கிடைக்கும். நீங்கள் அனைவரும் ஒரு விவாதம் மாதிரி நடத்தினீர்கள் என்றால், என்னால் அனுமதிக்க முடியாது. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை அவர்கள்.*

டாக்டர் (திருமதி) பூங்கோதை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஆலங்குளம் தொகுதி, கடையம் ஒன்றியத்தில் பொத்தான்பிள்ளை குடியிருப்பு என்ற கிராமம் இருக்கிறது. அந்தக் கிராமமானது முண்டன்துறையிலிருந்து களக்காடு வரையிலும் புலிகள் சரணாலயம் இருக்கின்ற இடத்தில் அமைந்துள்ளது. நேற்றைக்கு நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே சொல்லியிருக்கிறேன். கடையம் 29 மைல்* range*–ல் ஆலங்குளம் தொகுதிக்குட்பட்டு வருகிறது. கடந்த 9 மாதங்களாகக் கிட்டத்தட்ட 10 முறை சிறுத்தைகள் அந்தக் கிராமத்திற்கு வந்து மக்களை அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றன. கிட்டத்தட்ட 75–க்கு மேற்பட்ட ஆடுகளும், கறவை மாடுகள்*

மற்றும் 100 காவல் நாய்களும் இறந்துவிட்டன. கடந்த வாரம், சனிக்கிழமை பள்ளிக்கூட நேரத்தில், 4½ மணியளவில் சிறுத்தை பள்ளிக்கூடத்திற்குள்ளே வந்து ஆடு ஒன்றை இழுத்துக்கொண்டு போய்விட்டது. மக்கள் மிகவும் பயந்துபோயிருக்கிறார்கள். பலமுறை B.D.O. அவர்களிடம் தெரு விளக்குகளைப் பொருத்தச் சொல்லியும், அவர்கள் தெரு விளக்குகளைப் பொருத்தவில்லை. Electric fencing—சூரிய ஒளியினால் செயல்படுகிற மின்சார வேலியும் செயல்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் உட்காருங்கள். சிறுத்தை வந்து அச்சுறுத்துகிறது. அது சம்பந்தமாக மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை அவர்கள் ஏற்கெனவே அமைச்சராக இருந்தவர்கள். இதெல்லாம் செய்தித்தாளில் வராத செய்திகள், யாருக்கும் தெரியாத செய்திகள், இது குறித்து செய்தித்தாளில் வந்திருந்தால் நிச்சயம் எங்களின் கவனத்திற்கு வந்திருக்கும். சிறுத்தை கடித்துவிட்டது, புலி கடித்துவிட்டது என்று துறை மூலமாகச் சொல்லியிருப்பார்கள்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. உ. மதிவாணன், திரு. த. மனோ தங்கராஜ் ஆகியோர் எழுந்து நின்றனர்.)

கொஞ்சம் உட்காருங்கள். நான் பேசியதற்குப் பிறகு பேசுங்கள். Exaggeration ஆகச் சொல்வதற்கு இதைத்தான் உதாரணமாக வைத்துக்கொள்ள வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் புலிகளைப் பற்றிச் சொல்கிறார்கள். இப்போது திடீரென்று தகவல் கேட்பதனால், என்னிடம் இல்லை. தகவல் பெறப்பட்டவுடன் முன்னாள் அமைச்சர் டாக்டர் (திருமதி) பூங்கோதை அவர்களின் கோரிக்கை குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும். வன இலாகா அதை பார்த்துக்கொண்டு சும்மா இருக்காது. மக்களையும், விலங்குகளையும் காப்பாற்றுவோம் என்ற உறுதியையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.